# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஏப்ரல் 18, 2026 Weekly E-paper • April 18, 2026




# தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்!

சுப.வீரபாண்டியன்

"நெருப்போடு விளையாட வேண்டாம்" முதல்வர் எச்சரிக்கை!

எழில்.இளங்கோவன்

தேர்தலில் பேரவை

தலையங்கம்

டெல்லியை அதிரவைக்கும் திராவிட முழக்கம்!

முனைவர் காந்திபாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஏப்ரல் 18, 2026

Weekly E-paper ● April 18, 2026


# தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்!

சுப.வீரபாண்டியன்

தொகுதி மறு வரையறைச் சட்ட முன்வடிவம் என்னும் பெயரில் தலைக்கு மேல் தொங்கிய கத்தி, நேற்று மாலை நாடாளுமன்றத்தில் அறுத்து எறியப்பட்டு இருக்கிறது!

1950களின் தொடக்கத்தில் குடும்பக் கட்டுப்பாடு என்னும் திட்டத்தை இந்திய ஒன்றிய அரசு கொண்டு வந்தது. அதை மிக நேர்மையாகவும், உறுதியாகவும் பின்பற்றிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று! அதனால் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும் போது, தமிழ்நாட்டில் மக்கள் தொகை அதிகரிப்பு என்பது குறைந்த விகிதாச்சார அளவிலேயே உள்ளது!

நாட்டின் நலன் கருதி, அத்திட்டத்தைப் பின்பற்றிய நமக்கு, இன்றைய இந்திய ஒன்றிய அரசு பரிசு தரவில்லை என்றாலும் குற்றமில்லை, தண்டனை தர முயற்சி செய்கிறது!



மக்கள் தொகையின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாற்றி அமைக்கும் திட்டம்தான் இந்தத் தொகுதி மறு வரையறை! இதன் காரணமாகக் குடும்ப நலத் திட்டத்தைப் பின்பற்றாத மாநிலங்கள் கூடுதல் எண்ணிக்கையில் நாடாளுமன்றத்தில் இடம் பெறப் போகும் வகையிலும், தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் தங்களின் பிரதிநிதித்துவ உரிமையை இழக்கும் வகையிலும் இத்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது!

இதனைத் தமிழ்நாடு, குறிப்பாகத் திமுக மிகக் கடுமையாக எதிர்த்தது! கழகத்தின் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தச் சட்ட முன்வடிவைத் தீயிட்டுக் கொளுத்தினார். நாடு முழுவதும் கழகத்தின் சார்பில் கருப்புக் கொடிகள் ஏற்றப்பட்டன.

தமிழ்நாட்டின் குரல் இந்தியா முழுவதும் எதிரொலித்தது! எதிர்க்கட்சிகள் எல்லோரும் இந்த மசோதாவிற்கு எதிராகக் கைகோத்து நின்றார்கள். நேற்றைக்கு அந்தச் சட்ட முன்வடிவம் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட போது, தேவையான பெரும்பான்மை (மூன்றில் இரண்டு பங்கு) கிடைக்கவில்லை. ஒன்றிய அரசின் தீர்மானம் தோல்வி அடைந்தது. நாட்டின் ஜனநாயகத்திற்கும், உரிமைக் குரலுக்குமான முதல் வெற்றியாக அது அமைந்தது!

இப்போது புதிதாக ஒரு வியாக்கியானத்தை அவர்கள் முன்வைக்கிறார்கள். அந்த மசோதாவோடு சேர்த்து இன்னொன்றையும் அவர்கள் கொண்டு வந்தார்கள். பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு என்பதே அது!

இப்போது பெண்களின் இட ஒதுக்கீட்டு உரிமைக்கு எதிர்க்கட்சிகள் குறுக்கே நிற்கின்றன என்று கூறுகிறார்கள். எடப்பாடியும் அதற்கு ஆமாம் போடுகிறார்!

பெண்களுக்கான அந்த இட ஒதுக்கீட்டை 96ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தியது திமுக ஆட்சி தான்! இன்றும், என்றும் அது நமக்கு இசைவான கொள்கைதான்!

இந்த இடத்தில் ஒன்றிய அரசு செய்திருக்கும் சூழ்ச்சியை நாம் அம்பலப்படுத்தி ஆக வேண்டும். 2023 ஆம் ஆண்டே பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டும் விட்டது. ஆனால் அதனை மோடி அரசு நடைமுறைப் படுத்தவில்லை!

இப்போது திட்டமிட்டு, இந்தத் தொகுதி மறு வரையறைச் சட்ட திருத்தத்தோடு அதனையும் இணைக்கிறது! இதனை எல்லாம் மக்கள் மிக எளிதாகப் புரிந்து கொள்வார்கள். இந்த வழியில் எல்லாம் இனி மக்களை ஏமாற்றி விட முடியாது என்பதை பாஜக அரசு புரிந்து கொள்ள வேண்டும்!

உரிமை மறுப்பும், தீமைகளும் எந்த வடிவத்தில் வந்தாலும், அவற்றைத் தமிழ்நாடு எதிர்த்துப் போராடும், தமிழ்நாடு வெல்லும்!

# "நெருப்போடு விளையாட வேண்டாம்" முதல்வர் எச்சரிக்கை!

**எழில்.இளங்கோவன்**

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வாக்களிக்கும் நாள் நெருங்கிவிட்டது, ஏப்ரல் 23.

யாருக்கு வாக்களிக்கப் போகிறோம்? சர்வாதிகாரப் பாசிச டில்லி தாமரை அணிக்கா? சமத்துவ சமூகநீதிக் காவலின் அடையாளம் தமிழ்நாட்டு உதயசூரியன் அணிக்கா?

பாஜகவின் தாய்வீடான ஆர்எஸ்எஸ்-இன் 2000ஆம் ஆண்டின் தலைவர் கே.சுதர்சன் அன்று சொன்னார், "இந்திய அரசியல் சாசனம் வெளிநாட்டுக் கொள்கை, பண்பாட்டைச்சார்ந்திருக்கிறது. அதைத்தூக்கி எறியுங்கள். இந்தியப் "புனித நூலின்" அடிப்படையில் சாசனத்தை



உருவாக்குங்கள்". அந்தப் புனித நூல் 'மனுஸ்மிருதி'

வாஜ்பேயி பிரதமராக இருந்தபோது அமெரிக்காவின் லெய்டன் தீவிற்குச் சென்றிருந்தார். அங்கு இந்துக்களிடம் "இப்போது நமக்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையில்லை. வருங்காலத்தில் நமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும். அப்போது நாம் விரும்பிய (ராமராஜ்ய) இந்தியாவை அமைப்போம்" என்று பேசியிருக்கிறார்.

சுதர்சன் இந்திய அரசியல் சாசனத்தை இந்துத்துவ சாசனமாக மாற்ற வேண்டும் என்றார். வாஜ்பேயி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வரட்டும் என்றார். இந்திய ஒன்றியம் எத்தகைய ஆபத்தில் இருக்கிறது என்பது இப்போது புரிகிறதல்லவா?

இப்போதுவரையும் தென்மாநிலக் கட்சிகளின் தொகுதிகள் பெறுகின்ற வெற்றியின் அடிப்படையில் ஒன்றியத்தில் ஆட்சி அமைந்தது. அதேநேரம் தென்மாநிலங்கள், குறிப்பாகத் தமிழ்நாடு பாஜகவுக்குப் பெரும் தடையாக இருந்து வருகிறது. கடந்தகாலங்களில் குடும்பக் கட்டுப்பாட்டைச் சரியாக நடைமுறைப்படுத்தி மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியது தென்மாநிலங்கள். அதற்குத் தண்டனையாகத் தொகுதிவரையறை என்ற பெயரில், தொகுதிகளை இங்கே குறைத்துவிட்டு, குடும்பக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தாத உத்தரப் பிரதேசத்திற்கு 80இல் இருந்து 143 ஆகவும், பீகாரில் 40 முதல் 79 வரையும், இந்தி பேசும் சத்திஸ்கர், டில்லி, அரியானா, இமாச்சலப் பிரதேசம், ஜார்கண்ட் போன்ற மாநிலங்களில் தொகுதிகளை அதிகப்படுத்தவும் திட்டமிடுகிறது ஆர்எஸ்எஸ்/பாஜக. இதன்மூலம் தமிழ்நாடு 40 விழுக்காடு பின்னோக்கித் தள்ளப்படும். இதற்காகவே 543 இருக்கைகள் கொண்ட நாடாளுமன்றத்தில் 850 இருக்கைகள் கொண்டதாக அமைத்திருக்கிறது பாஜக. இதன்மூலம் இனிவடக்கு மாநிலங்கள் வாக்களித்தாலே ஒன்றிய ஆட்சியை அமைக்கலாம் என்று சதி செய்கிறது பாஜக. ஒட்டு மொத்த இந்தியாவும் உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார், மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய ஆறு மாநிலங்களால் இனி ஆளப்படும் என்பது இதற்குள் இருக்கும் சதி!

ஆகவே, கண்டிப்பாக பாஜகவைத் தோற்கடித்து விரட்ட வேண்டும் இந்தத் தேர்தலில்!

பாஜக, தமிழ்நாட்டின் மாநில உரிமைகளைப் பறிக்கிறது. பாசிசத்தைக் கையில் வைத்திருக்கிறது. மதவாதத்தைத் தூண்டி ஜனநாயகத்தைச் சிதைத்துக் கலவரத்தைத் தூண்டும் முயற்சிகளைத் தொடர்ந்து செய்கிறது.

ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தமிழ்நாட்டின்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## தேர்தலில் பேரவை

இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று சொல்வார்கள். இந்தியாவில் அதிபர் முறை ஆட்சியில்லை, நாடாளுமன்ற ஜனநாயகமே கோலோச்சுகிறது.

இருந்தாலும் நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கொண்டே நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து விடலாம் என்பதைச் சங்கிக் கூட்டம் எவ்வளவு நரித்தனத்தோடு சிந்தித்துச் செயல்படுத்துகிறது என்பதற்குக் கண்முன் நிற்கும் தொகுதிவரையறையே சான்றாக இருக்கிறது. அதுவும் தமிழ்நாடு, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் தேர்தல் நடைபெற இருக்கும்போது மறுவரையறையைச் செய்யத் துடிக்கிறது ஆர்எஸ்எஸ்/ பாஜக கும்பல்.

இந்தப் பாசிச பாஜகவை இச்சட்டமன்றத் தேர்தலில் தோற்கடிக்க திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு அணியினர் முனைந்து களம் இறங்கியுள்ளனர்.

அதே பணியில் திமுகழகத்திற்குத் துணைநின்று 'திராவிட இயக்கத் தமிழர் பேரவை'த் தோழர்களும் தேர்தல் களப்பணியாற்றி வருகிறார்கள்.

திமுக வழிகாட்டலின்படி பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் நாடு முழுவதும் பரப்புரையைத் தீவிரமாக மேற்கொண்டு வருகிறார்.

பொதுச்செயலாளர் சிற்பி செல்வராசு, திராவிட நட்புக் கழகத் தலைவர் ஆ.சிங்கராயர், பேரவைத் துணைப் பொதுச்செயலாளர்கள் காசு.நாகராசன், உமா, வழக்கறிஞர் இராம.வைரமுத்து, திண்டுக்கல் புலேந்திரன், ரவி,



இளைஞரணி தீபன், நெல்லை சந்தானம், செங்கை மாவட்டச்செயலாளர் அன்பு, தாம்பரம் இளங்கோ, முத்துக்குமார், எட்வின், கார்த்தி, திராவிடமணி, அம்பத்தூர் மோகன்ராம் உள்படப் பேரவையின் அனைத்து மாவட்டப் பொறுப்பாளர்களும் தேர்தல் பணியில் தொய்வின்றி பணியாற்றுகிறார்கள் பாஜகவை வீழ்த்தவும், திராவிடத்தை மீண்டும் ஆட்சியில் அமர்த்தவும்.

இதுவும் திராவிட இயக்க வரலாற்றில் ஒரு பதிவு.

ஆரியத்தால் வீழ்ந்தோம்!

திராவிடத்தால் எழுந்தோம்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

வளர்ச்சிக்காக எவ்வித திட்டங்களையும் ஒதுக்குவதில்லை. தமிழ்நாட்டின் நலன்களைப் புறக்கணித்து வருகிறது. அத்துடன் கூட்டாட்சித் தத்துவத்திற்கு மாறாக, மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பறித்து, இந்தி மற்றும் கலாச்சார திணிப்பில் துணிந்து அது ஈடுபடுகிறது.

முக்கியமாக "ஏப்ரல் 16, நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் கூடுகிறது என்று சொல்வதைவிட, தமிழ்நாடு, மேற்கு வங்கத் தேர்தலுக்கு இடையில் வலுக் கட்டாயமாகக் கூட்டப்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்" என்று தொகுதி மறுவரையறை குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சொல்வது கவனத்திற்கு உரியது.

நமது முதலமைச்சர் சொல்கிறார், "தலைக்கு மேல் கத்தி தொங்கிக் கொண்டு இருக்கிறது" என்று. எஸ்.வி.ராஜதுரை சொல்கிறார், "வாசலில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறது பாசிசம்".

பாசிச ஆர்எஸ்எஸ்/பாஜகவை முற்றிலுமாகத் துடைத்து விரட்டியடிக்க வேண்டும் அதன் கூட்டணியுடன்.

வாருங்கள்! உதயசூரியன் தலைமையிலான மதச்சார்பற்ற திமுக முற்போக்குக் கூட்டணிக்கே வாக்களிப்போம்.

சுதர்சன், வாஜ்பேயி வழியில் வந்த மோடி, அமித்ஷாக்களை எச்சரிக்கிறார் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "நெருப்போடு விளையாட வேண்டாம் !"

# டெல்லியை அதிரவைக்கும் திராவிட முழக்கம்!

முனைவர் காந்திபாபு

"வடக்கே இருந்து வரும் ஆதிக்கக் குரலுக்கு ஒருபோதும் தெற்கே இடமில்லை" என்பதைத் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் இந்த மண்ணில் ஆழமாக விதைத்துச் சென்றிருக்கிறார்கள். இன்று அதே முழக்கத்தை 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' எனும் தமிழ்நாட்டின் தளபதி, டெல்லி ஏகாதிபத்தியத்தின் செவிகளில் அறைந்து சொல்லியிருக்கிறார்.

ஒன்றிய பாசிச பாஜக அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள தொகுதி மறுவரையறை (Delimitation) நடவடிக்கைக்கு எதிராகத் தனது கடும் கண்டனத்தையும், எச்சரிக்கையையும் பதிவு செய்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள காணொளி வெறும் அரசியல் உரையல்ல; அது, டெல்லி ஆதிக்கத்தின் செருக்கை அடக்கப் புறப்பட்டத் திராவிடத்தின் போர்க்குரல்!

குடும்ப நலத் திட்டத்தை இந்தியாவில் முன்னணியில் நின்று செயல்படுத்திய மாநிலம் தமிழ்நாடு. தந்தை பெரியார் மற்றும் அண்ணாவின் சமூக சீர்திருத்தக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தமிழ்நாட்டிற்குப் பரிசாக அதன் நாடாளுமன்ற இடங்களைக் குறைப்பது மிகவும் வேதனைக்குரியது என கலைஞர் அன்றே சாடினார்.

"1962-ஆம் ஆண்டு வரை 41-ஆக இருந்த தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகள், 1967-இல் 39-ஆகக் குறைக்கப்பட்டன. மக்கள் தொகையைக் குறைத்தது குற்றமா? நாட்டு நலனுக்காகச் சிறப்பாக செயல்பட்ட ஒரு மாநிலத்தைத் தண்டிப்பது எந்த வகையில் நியாயம்?.

மக்கள்தொகைப் பெருக்க விகிதம் குறைகிறது என்பதற்காகத் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கக்கூடாது. அதற்கேற்ப அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும்" என 1999-லேயே தீர்மானம் நிறைவேற்றி டெல்லிக்கு அழுத்தம் கொடுத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

பிரதமர் மோடி தமிழர்களையும், தென் மாநில மக்களையும் இரண்டாம்தரக் குடிமக்களாகப் பார்க்கிறாரா? என்று கேள்வி எழுப்பியுள்ள முதல்வர்,



மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதற்காகத் தண்டனை வழங்குவதை ஒருபோதும் ஏற்க முடியாது என கர்ஜித்துள்ளார். ஒன்றிய பாசிச பாஜக அரசின் ஆணவப்போக்கைக் கண்டித்தும் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள இந்தச் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும், தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் கருப்புக்கொடி ஏற்றி, நமது எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும் என முதல்வர் அறைகூவல் விடுத்துள்ளார்.

"இதுவரை டெல்லியின் பிடிக்குள் வராத தமிழ்நாடு, இனி டெல்லியைத் தன் ஆளுகைக்குள் கொண்டு வரும்!" என்று தைரியமாகக் குறிப்பிட்டுள்ளார் முதல்வர் ஸ்டாலின்.

அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளில், அவர் இயற்றிய அரசியலமைப்பைக் காக்கப் புறப்பட்ட இந்தத் திராவிடப் போர், டெல்லி ஏகாதிபத்தியத்திற்குப் பாடம் புகட்டும். தமிழ்நாடு இனி அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்காது. இனி டெல்லி சொல்வதைத் தமிழ்நாடு கேட்காது; மாறாக, தமிழ்நாடு சொல்வதைத்தான் டெல்லி கேட்டாக வேண்டும் என்ற நிலையை உருவாக்கும்.

"தேர்தலும், அதிகாரமும் இரண்டாம் பட்சம். சுயமரியாதையும், மாநில உரிமைகளுமே திராவிட இயக்கத்தின் உயிர் மூச்சு" எனச்சொல்கிறார் முதல்வர்

தமிழ்நாடு போராடும்!.

தமிழ்நாடு வெல்லும்!.

ஸ்டாலின் தொடரட்டும்...

தமிழ்நாடு வெல்லட்டும்!.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian